## பாடம்- 19 மோசேயும் எரிகின்ற முட்செடியும் (யாத் 2:3)

தேவன் உங்களை எதையாகிலும் செய்யச் சொல்கிற போது அதை செய்ய முயற்சி செய்திருக்கிறீர்களா? நாம் வாலிபராக, ஆற்றல் படைத்தவராக, செல்வாக்கு மிகுந்த இடத்திலிருக்கும் போது இதை முயற்சி செய்வது எளிதானது. இன்று நாம் கற்றுக்கொள்ளப் போகிற பாடத்திலே மோசேயும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இருந்தான்.

மோசே தன் நாற்பது வயது வரை ஒரு சிறப்பு மிக்க குழந்தையாக அரசகுடும்பத்தின் ஒரு பகுதியாக அரண்மனையிலே வளர்க்கப்பட்டான். அவன் எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். (எபி 7:22).

ஆனால், தான் ஒரு எபிரெயன் என அறிந்து கொண்டபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என அழைக்கப்படுவதை வெறுத்தான். அவன் தன்னை தேவ பிள்ளைகளில் ஒருவனாக காட்டிக்கொண்டு பாடு அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்.

ஒரு நாள் மோசே தன் சொந்த ஜனமாகிய எபிரெயரில் ஒருவனை, ஒரு எகிப்தியன் அடிக்கிறதை கண்டான். பின்னர் மோசே அங்கும் இங்கும் யாராவது தன்னை கவனிக்கிறார்களா என பார்த்து ஒருவரும் இல்லை என்று அறிந்து அந்த எகிப்தியனை கொலை செய்தான்.

பின் விரைவாக அந்த உடலை மணலிலே புதைத்து போட்டான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதை தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்.

அவர்களோ அதை அறியவில்லை (எபி 7:25) மறுநாளிலே அவன் வெளியே சென்ற போது இரு எபிரெயர்கள் சண்டையிடுவதை பார்த்தான். அப்பொழுது அவன் அநியாயம் செய்கிறவனை நோக்கி, "நீ உன் உடன் சகோதரனாகிய ஏபிரெயனை அடிக்கிறது என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அந்த மனிதன் "எங்கள்மேல் உன்னை அதிகாரியாக ஏற்படுத்தினவன் யார்? நீ என்னுடைய நியாயாதிபதி அல்ல. நேற்று நீ எகிப்தியனை கொன்று போட்டது போல என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ?" என்று கத்தினான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான்.

பார்வோன் அந்த காரியத்தை கேள்விபட்டபோது மோசேயை கொலை செய்ய வகைதேடினான். ஆனால் மோசேயோ எகிப்திலிருந்து தப்பி ஓடிப்போனான்.

அவன் சீனாயின் தென்கிழக்கு பகுதியிலுள்ள மீதியான் என்ற காய்ந்த பாழான வனாந்திரத்தை அடைந்தான். ஏழு பெண்கள் ஒரு தூரவண்டையிலே தண்ணீர் மொண்டு தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்காக தொட்டிகளை நிரப்பிக் கொண்டிருக்கும் போது அவன் அந்த துரவண்டையிலே உட்கார்ந்திருந்தான்.

அவர்கள் மீதியான் தேசத்து ஆசாரியனான எத்திரோவின் குமாரத்திகள்.

அப்பொழுது சில மேய்ப்பர்கள் வந்து அவர்களைத் துரத்தினார்கள். மோசே எழுந்து, அந்த பெண்களை பாதுகாத்தான். மேய்ப்பர்களோடு சண்டையிட்ட பிறகு, அவர்களுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட உதவினான்.

அந்த பெண்கள் திரும்பி வீட்டிற்கு வந்தபோது அவர்கள் சீக்கிரமாய் வந்ததை குறித்து அவர்களுடைய தகப்பன் ஆச்சரியப்பட்டான். அவர்களை தங்கள் தகப்பனிடம் ‘‘எகிப்தியன் ஒருவன், மேய்ப்பரின் கைக்கு எங்களைத் தப்புவித்து எங்களுக்கு தண்ணீர் மொண்டு கொடுத்து, ஆடுகளுக்கும் தண்ணீர் காட்டினான்’’ என்றார்கள்.

அவன் தன் குமாரத்திகளைப் பார்த்து, “அவன் எங்கே? அவனைக் கண்டு, போஜனம் பண்ணும்படிக்கு நம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்” என்றான். அதன் பிறகு, அந்த மனிதன் தன் மகளாகிய சிப்போராளை மோசேக்கு திருமணம் செய்து கொடுத்தான்.

அவன் தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்ப்பவனானான். அவர்களுக்கு கெர்சோம் மற்றும் எலியேசர் என்ற இரு மகன்கள் பிறந்தார்கள்.

சில வருடங்கள் சென்ற பின் எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைதனத்தினிமித்தம் தேவனிடத்தில் உதவிக்காக வேதனையுடனே முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

தேவன் தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார்.

இப்பொழுது மோசே எண்பது வயதுடையவனாக இன்னும் தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்து, ‘‘தேவனுடைய மலை’’ எனப்படும் சீனாய்க்கு வந்தான்.

அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தபோது முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும் அது வெந்துபோகாமல் இருந்தது.

அவன் அதன் அருகில் வந்த போது,முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி "மோசே, மோசே" என்று கூப்பிட்டார். அதற்கு அவன், "இதோ அடியேன்" என்றான். அப்பொழுது அவர் "இங்கே நெருங்கி வராதே, உன் கால்களில் இருக்கிற பாதரட்சையை கழற்றிப் போடு நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது" என்றார். ஆவன் பாதரட்சையை கழற்றியபோது, தேவன் மீண்டும் அவனிடத்தில் பேசுவதை கேட்டான்.

அவர் "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்றார். மோசே, தேவனை நோக்கிப் பார்க்க பயந்ததினால் தன் முகத்தை மூடிக் கொண்டான்.

அப்பொழுது கர்த்தர் "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே கொண்டு போய் சேர்க்கவும் இறங்கினேன்.

நான் அவர்களை கானான் தேசத்திற்கு திரும்ப அழைத்துக் கொண்டு போகும்படியாய் அவர்களை வழி நடத்த உன்னை தெரிந்தெடுத்தேன். எனவே இப்பொழுதே போ! என் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு போக உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்பினேன்" என்றார்.

அதற்கு மோசே ‘‘ஐயோ! கர்த்தாவே பார்வோனிடத்திற்கு போக நான் எம்மாத்திரம்? இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வர நான் சரியானவன் அல்ல’’ என மறுத்தான்.

ஆனாலும் தேவன் மோசேயோடே பொறுமையாக ‘‘நான் உன்னோடே இருப்பேன். நீ என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வந்தபின் நீங்கள் இந்த மலையில் எனக்கு ஆராதனை செய்வீர்கள்’’ என்றார்.

அப்பொழுது மோசே, ‘‘நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்கு சொல்லும் போது, அவருடைய நாமம் என்ன? என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்? என்றான்.

அதற்கு தேவன் ‘‘இருக்கிறவராகவே இருக்கிறேன். இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார்.

இஸ்ரவேலின் மூப்பர்கள் உனக்கு செவிகொடுப்பார்கள், ஆனால் பார்வோனோ உனக்கு செவிகொடுக்கமாட்டான். எனவே நான் அவனை கடினமாக தண்டிப்பேன். அதற்கு பிறகு அவன் உங்களை போக விடுவான்’’ என்றார்.

ஆனாலும் மோசே தயக்கத்துடன் மூன்றாவது முறையாக எதிர்ப்பு தெரிவித்து, ‘‘அவர்கள் என்னை நம்பாமல் அல்லது எனக்கு செவிகொடாமல் போனாலோ நான் என்ன செய்வேன்?’’ என்றான். எனவே கர்த்தர் மோசேயிடம் ‘‘உன் கையிலிருக்கிறது என்ன?’’ என்றார்.

அவன் ‘‘ஒரு மேய்ப்பனின் கோல்’’ என்றான். அதை கர்த்தர், ‘‘தரையிலே போடு’’ என்றார். அவன் தரையிலே போட்ட போது அது சர்ப்பமாயிற்று. மோசே பயத்துடன் அதற்கு விலகியோடினான்.

அப்பொழுது கர்த்தர் ‘‘உன் கையை நீட்டி அதின் வாலைப் பிடி’’ என்றார். அவன் தன் கையை நீட்டி அதை பிடித்த உடனே மறுபடியும் மேய்ப்பனின் கோலாக அது மாறியது.

மேலும் கர்த்தர் அவனை நோக்கி ‘‘உன் கையை உன் மடியிலே போடு’’ என்றார். மோசே அப்படி செய்து, தன் கையை திரும்ப மடியிலிருந்து வெளியே எடுத்த போது,அவன் கையிலே கொடூரமான வெண்குஷ்டம் பிடித்திருந்தது.

அவர் ‘‘உன் கையை திரும்பவும் மடியிலே போடு’’ என்றார். அவன் அவ்வாறு செய்து கையை வெளியே எடுத்த போது வெண்குஷ்டம் மறைந்து அது திரும்ப மற்ற சதையை போலாயிற்று.

பின்னும் அவர் ‘‘ஜனங்களுக்கு இந்த இரண்டு அடையாளங்களை காண்பி. அப்பொழுது அவர்கள் நான் உனக்கு தரிசனமானதை நம்புவார்கள். அவர்கள் முதல் இரண்டு அடையாளங்களை நம்பாமல் போனால் நீ நைல் நதியின் தண்ணீரை மொண்டு நிலத்திலே ஊற்றுவாயாக. அது இரத்தமாக மாறும்’’ என்றார்.

அப்பொழுது மோசே காத்தரை நோக்கி நான்காவது முறையாக ‘‘ஐயோ கர்த்தாவே! நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்’’ என பொறுப்பை தட்டிக் கழிக்கப் பார்த்தான்.

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி, “ மோசேயே மனுஷனுக்கு வாயை உண்டாக்கினர் யார்? ஊமையனையும், செவிடனையும், பார்வையுள்ளவனையும், குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? எனவே போ. நான் சொன்னபடியே செய். நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்” என்றார்.

ஆனாலும் மோசே, “ஆண்டவரே நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்” என கெஞ்சினான்.

இதனால் கர்த்தர் மோசேயின் மேல் கோபம் கொண்டு, “உன் சகோதரனாகிய ஆரோன் உன்னை சந்திக்கப் புறப்பட்டு வருகிறான். அவன் நன்றாக பேசுவான். அவனை உன்னோடு கூட்டிக்கொண்டு எகிப்திற்கு போ. இந்த கோலையும் எடுத்துக் கொண்டு போ. இதனால் நீ அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வாய்” என்றார்.

மோசே இப்போது கர்த்தர் தனக்கு சொன்னபடி செய்தான்.

இந்த பாடம் மிகவும் முக்கியம் ஏனென்றால் தேவனுக்காக செய்யப்படுகின்ற எல்லா வேலைகளும் நம்முடைய இஷ்டத்தின்படி அல்லாமல் அவருடைய திட்டத்தின்படி அவர் குறித்திருக்கின்ற நேரத்திலே செய்யப்பட வேண்டும் தெரிவிக்கிறது.

நம்மை எந்த காரியத்தை செய்ய தேவன் அழைக்கின்றாரோ அதை செய்து முடிக்க அவர் வழி வகை செய்வார். மேலும் தேவன் யாராவது ஒருவரை ஒரு சிறந்த வேலையை செய்ய அழைக்கும் போது அதை செய்யாமல் இருக்க சொல்லும் சாக்கு போக்குகளையோ, விசுவாச குறைவுகளையோ அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இந்த பாடம் நமக்கும் கற்றுத் தருகிற முக்கிய சத்தியம் என்னவென்றால் நம்மை குறித்த தேவனுடைய திட்டமும், அவரின் அழைப்பும் தேவனிடத்திலிருந்தே வருகிறது. நம்மிடத்திலே அல்ல.

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. தேவன் எரிகின்ற முட்செடியின் நடுவிலிருந்து மோசேயிடம் என்ன கூறினார்? (6 நொடிகள் நிற்கவும்)

“நான் என் ஜனங்களை கானான் தேசத்திற்கு திரும்ப அழைத்துக் கொண்டு போகும்படி அவர்களை வழி நடத்த உன்னை தெரிந்தெடுத்தேன்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. தேவனுடைய திட்டத்திற்கு மோசேயின் பதில் என்ன? (6 நொடிகள் நிற்கவும்)

   “தேவனே என்னை அனுப்ப வேண்டாம். இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வழி நடத்தி அழைத்துக் கொண்டு வர நான் சரியானவன் அல்ல என மோசே கூறினான” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. தேவன் மோசேயை சமாதானப்படுத்தி பார்வோனிடம் பேச வைக்க என்ன கூறினார்? (6 நொடிகள் நிற்கவும்)

"உன் சகோதரனாகிய ஆரோன் நன்றாக பேசுவான். அவனை உன்னுடனே கூட்டிககொண்டு எகிப்திற்கு செல் என்று தேவன் கூறினாா" என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள். கடைசியாக இதைப் பற்றி கேட்டிராத ஒரு நண்பருக்கு இந்த பாடத்தை சொல்லுங்கள்.

தேவன் ஒரு குறிப்பிட்ட காரியத்தை தனக்காக செய்யும்படி உங்களிடத்தில் எப்போதாவது பேசியிருந்ததை உணர்ந்திருக்கிறீர்களா? அதற்கு உங்களின் பதில் பயமா அல்லது விசுவாசமா? தேவன் இன்று உங்களுக்கு அமைத்து வைத்திருக்கின்ற பாதையில்தான் தொடர்கிறீர்களா?

பாடம் முடிந்தது